செ. கு. எண்: 015 நாள்: 25.01.2018

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 25.1.2018

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், நல்லகாணகொத்தபள்ளி தரப்பு, குருபராத்தபள்ளி கிராமம், தேசிய நெடுஞ்சாலையில் பெங்களூரிலிருந்து திருப்பத்தூர் நோக்கி வந்து கொண்டிருந்த அரசுப் பேருந்தும், காரும் மோதிய விபத்தில், கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சரவண பாபு என்பவரின் மகன் திரு. மனிஷ்குமார், திரு. சங்கர் என்பவரின் மகன் திரு. சஞ்சய்குமார், திரு. சுரேஷ் என்பவரின் மகன் திரு. ஆதார்ஷ், திரு. மகேஷ் என்பவரின் மகன் திரு. ஆகாஷ், திரு. கிருஷ்ணப்பா என்பவரின் மகன் திரு. இசக்கியா மற்றும் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பேருந்து நடத்துனர் திரு. சின்னசாமி என்பவரின் மகன் திரு. கோவிந்தராஜ் ஆகிய ஆறு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த ஆறு நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்து குறித்து அறிந்தவுடன், உடனடியாக மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறவும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்யவும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.பாலகிருஷ்ணா ரெட்டி, மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர்களுக்கு விபத்து நடந்த அன்றே உத்தரவிட்டிருந்தேன்.

இந்த விபத்தில் இருத்தொன்பது நபர்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும்; பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/- ரூபாயும்; லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/—ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**

**நாள்: 25.01.2018**